

தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்
CSI Tamil Parish Al-Ain, UAE
மன்னா..
அவர் இங்கே இல்லை தாம் சொன்னபடியே
உயிர்த்தெழுந்தார் கர்த்தரை வைத்த இடத்தை வந்து
பாருங்கள்
- மத்தேயு:28:6
APRIL '2022

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| 09 SAT<br>7.45 PM<br>9.00 PM | PALM SUNDAY<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| 14 THU<br>6.00 PM<br>7.00 PM | MAUNDY THURSDAY<br>MAJLIS HALL<br>CONTACT: THE PRESBYTER |
| 15 FRI<br>5.45 PM<br>7.30 PM | GOOD FRIDAY<br>MAIN HALL<br>CONTACT: THE PRESBYTER |
| 17 SUN<br>6.00 AM<br>7.00 AM | EASTER SUNDAY<br>MAJLIS HALL<br>CONTACT: THE PRESBYTER |
| SAT<br>7.30 PM<br>9.00 PM | EVENING SERVICE<br>MAIN HALL<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 4TH FRIDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!
நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திரு பெயரில் திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த திருநாள் (ஈஸ்டர்) நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**இயேசு..... என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்...**

**-யோவான்:20:17**

JESUS SAID TO HER, "DO NOT CLING TO ME. FOR I HAVE NOT YET ASCENDED TO THE FATHER, BUT GO TO MY BROTHERS AND SAY TO THEM. I AM ASCENDING TO MY FATHER AND YOUR FATHER, TO MY GOD AND YOUR GOD."

- JOHN:20:17

ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது

- பாவத்தின் மேல் வெற்றி கொண்டது- *Victory over Sin.*
- பயத்திலிருந்து விடுதலை தந்தது- *Fearleaves Life..*
- புதுவாழ்வு தந்தது- *To Give your New Life*

இந்த சிந்தனையுடன் ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுந்த திருநாளை கொண்டாட அழைக்கப்படுகிறோம்.

தொடர்ந்து கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகிற நம்முடைய ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த கொராண தொற்றுநோய் தொடர்ந்து நமது தேசங்களில் பரவி வராமல் இருக்க இந்த இக்கட்டான காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குறிப்பாக வேலை இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்..


தொடர்ந்து நமது திருச்சபையில் Zoom வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, ஜெபிக்கவும் அழைக்கப்படுகிறோம்.

### திருச்சபை ஆண்டு விழா (13TH CHURCH ANNIVERSARY)

இந்த மாதம் ஏப்ரல் 23 -ஆம் தேதி நடக்க இருக்கின்ற நமது திருச்சபையின் ஆண்டு விழாவிற்காகவும், நமக்கு இந்த தேசத்தில் இந்த திருச்சபையை உருவாக்கித் தந்த நமது திருச்சபையின் மூத்த உறுப்பினர்கள்,(மூப்பர்கள்) அவர்களின் குடும்பத்தினர், இந்த திருச்சபையில் திருப் பணியாற்றிய போதகர்கள் அவர்களின் குடும்பத்தினர் மற்றும், நமது திருச்சபையில் பங்கு பெறுகிற குடும்பத்தினர், பொறுப்பாளர்கள், திருச்சபையின் திருப்பணியிலே தங்களை இணைத்துக் கொள்கிற அனைவருக்காகவும் ஜெபிக்கவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்தவும் அழைக்கப்படுகிறோம்...

### லெந்து கால தின தியானம்-2022

இந்த லெந்து காலங்களை திருச்சபை குடும்பமாய் அனுசரிக்க அழைக்கப்படுகிறோம். இந்த நாட்களில் தினமும் காலை:6:00 மணிக்கு லெந்து கால தின தியானம்




நடைபெறும் திருச்சபை குடும்பத்தினர் ஜெபத்துடன் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறிர்கள்.

தொடர்ந்து நடக்க இருக்கின்ற சிறப்பு ஆராதனைகள் புனித வியாழன்,புனித வெள்ளி, குருத்தோலை ஞாயிறு, உயிர்த்தெழுந்த ஆராதனை. (ஈஸ்டர்) இவைகளில் ஜெபத்துடன் குடும்பமாய் பங்குபெற அழைக்கப்படுகிறீர்கள்.

தொடர்ந்து திருச்சபையின் வளர்ச்சியிலும், ஊழியத்திலும்,திருச்சபை குடும்பங்களிலும், நமது பிள்ளைகளின் வாழ்விலும், கல்வியிலும்,புதிய தொடக்க கல்வி ஆண்டிற்காகவும் எதிர்காலத்திற்காகவும் ஆண்டவர் அநேக ஆசீர்வாதங்களை கொண்டுவரும் படியாய் ஜெபிக்கும்படியாகவும். அழைக்கப்படுகிறோம்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்

Rev.S.P.Baskar



# மீட்பின் மகிழ்வை கொண்டாடுதல் உயிர்த்தெழுதல்

## RESURRECTION: CELEBRATING THE JOY OF SALVATION

யாத்திராகமம்: 14:1-31 கொலோசேயர்:3:1-11 மத்தேயு:28:1-10

**முன்னுரை**

**அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்.**

**- மத்தேயு:28:6**

**HE IS NOT HERE, FOR HE HAS RISEN, AS HE SAID. COME, SEE THE PLACE WHERE HE LAY.**

**- MATTHEW:28:6**

STIG KERNAL - என்ற டச்சுக்காரர் தன்னுடைய மரணத்திற்குப் பிறகு மூன்று வார்த்தைகள் தன் OBITUARY COLUMN - த்தில் இருக்கவேண்டுமென ஒரு பத்திரிகையாளரிடம் கூறினாராம். அவர் தன்னுடைய 92-வது வயதில் மரித்த போது அவர் என்ன எழுதி இருந்தார் என்று படித்த போது " I AM DEAD" என்ற மூன்று வார்த்தைகள் எழுதியிருந்தார். இதனை அந்த நாளின் செய்தியாக படித்த அனைவருக்கும் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கியது. இதைதான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மரித்த போது " HE IS DEAD" என்ற மூன்று வார்த்தைகளை கூறியவர்கள் "HE IS RISEN" என்ற மூன்று உயிர்ப்புள்ள வார்த்தைகளையும் கூறினர். இன்றைக்கும் திருச்சபை இந்த நம்பிக்கையுடன் இயேசுவின் வாழ்வை, மரணத்தை, உயிர்த்தெழுதலை மீட்பின் நம்பிக்கையுடன் கொண்டாட அழைக்கப்படுகிறது.

EASTER கிறிஸ்துவ திருச்சபையின் கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமான பழமையான பண்டிகை ஆகும். இதை கிரேக்க லத்தீன் மொழிகளில் PASCHA எனவும் ஆங்கிலத்தில் EASTRA என்றும், ஜெர்மானிய மொழியில் OSTER என்ற மூலமொழியில் இருந்தும் இவற்றை அழைக்கப்படுகிறது. யூதர் பண்டிகைகளான

பஸ்கா பண்டிகை, கூடாரப் பண்டிகை, வாரங்களின் பண்டிகைகள் ஆகியவை விவசாயத்துடன் கொண்டாடப்படும் பண்டிகைகள் ஆகும். ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதல் பண்டிகை என்பது மீட்பின் மகிழ்வின் பண்டிகையாகும். இது கிறிஸ்தவ வாழ்வின் மிக முக்கியமான பண்டிகையாக அனுசரிக்க அழைக்கப்படுகிறோம். இந்த சிந்தனையுடன் திருமறை பகுதிகளில் சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

### 1. பய உணர்விலிருந்து பயமற்ற மீட்பின் வாழ்வு - யாத்திராகமம்:14:1-31

இஸ்ரயேல் மக்களின் சமூக சமய வாழ்வில் இன்றைக்கும் மறக்கமுடியாத ஒரு அனுபவ கொண்டாட்டம் என்பது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து ஆண்டவரால் மீட்கப்பட்ட வரலாறு ஆகும். இதனை பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் படித்து அறிந்து கொள்ளலாம். இஸ்ரவேலர் 430 ஆண்டுகள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, கடவுளில் மீட்பின் கருவியாக பயன்படுத்தப்பட்ட மோசேயின் மூலம் மீட்கப்பட்டு இப்போது செங்கடல் முன்பாக என்ன செய்வது என்ற பய உணர்வோடும், திகைப்போடும், மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து நிற்கின்றனர். காரணம் தங்களைப் பிடித்து மீண்டுமாக எகிப்துக்கு அடிமைத்தனத்திற்கே கொண்டுபோக நினைக்கின்ற அல்லது தங்களை உயிருடன் சாகடிக்க பின்தொடருகின்ற பார்வோனும் அவனது குதிரைப்படை, காலாட்படை வீரர்களும் சூழ்ந்திருக்கிற இந்த நிலையில் கடவுளின் மீட்பின் கருவியாக பயன்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கும் மோசேக்கும் கூட இஸ்ரவேல் மக்களின் அதே மன நிலை ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. காரணம் கடவுளின் மீட்பின் நோக்கம் சிதறடிக்கப்பட்டு விடுமோ என்ற நியாயமான பயம் அல்லது அச்சம் ஏற்பட்டிருக்கும் எதற்கு என்றால் வணங்கா கழுத்துள்ள இஸ்ரயேல் மக்களுக்கும் மீட்பின் கருவியாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் மோசேக்கும் இடையே இருந்த ஒரு விசுவாச இழுபறி நிலை (FAITH STRUGGLE) அல்லது பரிசுத்த போர் (HOLY WAR) எனக் கருதலாம். விசுவாச வாழ்வில் கடவுளின் வாக்குறுதியில் உள்ளம் தொலைந்து போயிருக்கும் இஸ்ரவேலருக்கு கடவுளின் மீட்பின் வாழ்வுக்குரிய வாக்குறுதி

**யாத்:14:14-கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மா யிருப்பீர்கள் என்றார்.**

( THE LORD WILL FIGHT FOR YOU AND YOU HAVE ONLY TO KEEP STILL)

யாத்:14:19-31- வரை உள்ள பகுதியில் பய உணர்வுடன் வாழ்வுக்கு பயந்து மீண்டும் எகிப்துக்கு சென்றாலும் நல்லது என்று செங்கடலைப் பார்த்தும், தங்களை பின் தொடர்ந்து வந்துக் கொண்டிருக்கும் எகிப்தின் படையினரை பார்த்தும் நடுங்கின மக்கள் இப்போது கடவுளின் மீட்பின் வாக்குறுதி அடிப்படையில் ( CONQUEST OF FEAR) உலர்ந்த தரையில் நடப்பதைப் போல செங்கடலை அனைவரும் கடந்தார்கள். இன்றைக்கும் சில நேரங்களில் நமக்கு வருகின்ற இடையூறுகள், பொல்லாப்புகள், கொள்ளை நோய்கள் இவற்றைக் கண்டு பயத்துடனும்,அச்சத்துடனும் வாழும்போது கடவுளின் வார்த்தை நமக்கு பய உணர்விலிருந்து பயமற்ற மீட்பின் வாழ்வுக்கு வழிநடத்துகிறது.

## 2. பழையதை களைத்து புது மனித இயல்பைத்தரிக்கும் மீட்பின் வாழ்வு

**-கொலோசெயர்:3:1-11**

இந்தப் பகுதியில் பரிசுத்த பவுல் உயிர்த்தெழுந்த ஆண்டவரைப் போன்று நாம் விசுவாசிகளாக, பரிசுத்தமுள்ளவர்களாக உலகத் தீமையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட, வேறு படுத்தப்பட்ட (HOLINESS OF BELIEVERS) பரிசுத்தவான்களாக வாழ அழைக்கப்படுகிறோம். பரி.பவுல் இந்தப் பகுதியில் உயிர்த்தெழுந்த இயேசுவின் வாழ்வை சுட்டிக்காட்டுகிற போது யோவான்:8:23,பிலி:3:24 வசனங்களில் காண்பதுபோல் "அவர் நம்மைப்போல் பாடுள்ள மனிதராக இந்த உலகில் வாழ்ந்தாலும் பாவம் செய்யாத பிரதான ஆசாரியராக இருந்தார்" (எபி:4:16) அதற்கு காரணம் அவர் பிதாவினிடத்திலிருந்து(மேலிருந்து) உண்டானவர். ஆகையால் அவர் (இயேசு) யோவான்:8:46 -வசனத்தின் அடிப்படையில் தன் எதிரிகளையும் பார்த்து "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்? என்று சவால் விட்டார். உயிர்த்தெழுந்த இயேசு, மேலிருந்து கீழே இறங்கி மீட்பின் பணியை முடித்து, வாழ்வின் வழியை நமக்கு காண்பித்து எங்கிருந்து வந்தாரோ அங்கேயே சென்று நியாயத்தீர்ப்பு செய்ய திரும்பி வருவதாக சொல்லியிருக்கிறார். தூய.பவுல் உயிர்த்தெழுந்த இயேசுவின் மேலோக பண்பினை எடுத்துரைத்து, நாம் இவ்வுலகத்திற்குரியவராக இருந்தாலும் மேலானவரின் (ஆண்டவர் இயேசுவின்) பண்புகளை தரித்துக் கொள்ள அழைப்பு விடுக்கிறார். இந்த உலகத்திற்குரிய பண்புகள் நம்மை அழிவிற்கும், இறப்பிற்கும் நேராய் வழி நடத்தும் "SEEK THE THINGS THAT ARE ABOVE NOT THE THINGS THAT ARE ON EARTH" மேலும் கொலோ:3:5-11 வரை உள்ள பகுதியில் பழைய மனித இயல்பையும்

அதற்குரிய செயல்களையும் கலைத்துவிட்டு புதிய மனித இயல்பை அணிந்துகொள்ள அழைப்பு கொடுக்கப்படுகிறது.வசனம்:10-இல் கிறிஸ்துவை அணிந்துகொள்வது பவுல் தருகிற சிறப்பான ஒரு உருவக நடை "CLOTHING OURSELVES WITH CHRIST IS THE PAULINE IMAGE" இன்றைக்கு நம்முடைய வாழ்விலும் பழைய மனித இயல்புகளை தவிர்த்து ஆண்டவர் விரும்புகிற புதிய மனித இயல்பை பெற்று ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுதல் வழியாக நமக்கு அருளுகின்ற மீட்பை கொண்டாட அழைக்கப்படுகிறோம்.

### 3. பரமனின் காலடிகளை பின்பற்றும் மீட்பின் வாழ்வு - மத்தேயு:28:1-10

ஆண்டவர் இயேசுவின் வாழ்வையே எடுத்துரைக்கும் நான்கு (மத்தேயு,மாற்கு, லூக்கா,யோவான்) நற்செய்தியாளர்களும் ஒன்றுபோல் இயேசுவின் பிறப்பு, போதனை, ஊழியம், செயல்பாடுகள், பாடு மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை எடுத்து சொல்லியிருக்கிறார்கள். மத்தேயு:28:1-10 இந்தப் பகுதியில் இறைமகன் இயேசுவின் உயிர்த்தெழுந்த நிகழ்வை பதிவு செய்துள்ளனர். இந்தப் பகுதியில் ஆண்டவர் இயேசு யாரை அப்போஸ்தலர்களாக (அனுப்பப்பட்டவர்கள்) தெரிவு செய்தாரோ அவர்கள் உயிர் வாழ்வுக்கு பயந்து தங்கள் இருப்பிடத்தில் அவரை பின்பற்றாமல் ஒளிந்து கொண்டிருந்த வேளையில் (லூக்கா:8:1-3, யோவான்:19:25) வசனங்களில் காணப்படுவது போல இயேசுவின் உடலுக்கு அடிப்படையில் இஸ்ரவேலில் காணாமல் போன கூட்டத்தின் பிரதிநிதியாக பெண்கள் கல்லறைக்கு வருகின்றனர் (மத்தேயு:10:6, 15:24) அவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை அணுகி அவர் காலடிகளை பற்றிக்கொண்டு பணிந்து நின்றார்கள். அவர்களிடத்தில் இயேசு என் சகோதரரை ( அப்போஸ்தலர்கள்) கலிலேயாவுக்கு போகுமாறு சொல்லுங்கள் அங்கே என்னைக் காண்பார்கள் என்றார். (கலிலேயாவில் ஏழை, பாமர,மக்கள் வாழும் பகுதியாகும் அங்கே ஊழியம் செய்ய அனுப்புகிறார்) இயேசுவின் காலடிகளைப் பற்றினவர்கள் அவரை கலிலேயா தொடங்கி கொல்கொதா மலை வரை பின்பற்றினவர்களும், இயேசுவின் உடலுக்கு நறுமணப் பொருட்களோடு வந்தவர்களுமான பெண்கள் அவர்கள் கல்லறை திறந்திருக்கவும் வானதூதர் அமர்ந்திருக்கவும் கண்டு பயந்த போது பயப்படாதீர்கள் என்ற நம்பிக்கையின் வார்த்தையைக் கேட்டனர். இதே வார்த்தையை இயேசு தன் காலடிகளைப் பற்றிக்கொண்ட பெண்களுக்கும் கூறுகிறார். இப்பெண்களை முதல் அப்போஸ்தலர்கள் மற்றும் அப்போஸ்தலர்களுக்கெல்லாம் அப்போஸ்தலர்கள் என்று அவர்களை கூறலாம்.

(THEY WERE THE FIRST APOSTLES AND ALSO APOSTLES TO THE APOSTLES) இயேசுவை உயிர்த்தெழுந்த ஆண்டவராகக் கண்டு மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுவது. ஒரு தனிநபரின் வாழ்வாக இருந்தாலும் அது இறைமகன் இயேசுவின் கலிலேயா திருப்பணியின் தொடக்கமும் (மத்தேயு:4:12) முடிவும் (மத்தேயு:28:10,16) என நம்பிக்கையுடன் கூறலாம்.

**நிறைவாக....**

இன்றும் உயிர்த்தெழுதல் மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுதல் என்பது நம்மை சுற்றிலும் உள்ள கலிலேயா பகுதிகளில் (ஏழை எளிய மக்களான இன்றைய கலிலேயா மக்கள்) அவர்களுடன் நம்மை இணைத்துக் கொண்டு அவர்களுக்காக பணி செய்ய ஆண்டவர் நம்மை திருச்சபை குடும்பமாய் அழைக்கிறார்.

**உயிர்த்தெழுதல் மீட்பின் மகிழ்வை கொண்டாடுவது என்பது**

- பய உணர்விலிருந்து பயமற்ற மீட்பின் வாழ்வு....
- பழையதைக் களைத்து புது மனித இயல்பைத் தரிக்கும் மீட்பின் வாழ்வு.
- பரமனின் காலடிகளை பின்பற்றும் மீட்பின் வாழ்வு....

இப்படிப்பட்ட சிந்தனையுடன் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த திருநாளை கொண்டாட அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இறைப்பணியில் உங்கள் ஆயர்

Rev.S.P.Baskar



# ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதலின் மகதலேனா மரியாளின் திருப்பணி

**முன்னுரை**

**பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை; இதோ, அவரை வைத்த இடம்..**

-மாற்கு:16:6

..."DO NOT BE ALARMED. YOU SEEK JESUS OF NAZARETH, WHO WAS CRUCIFIED. HE HAS RISEN; HE IS NOT HERE.SEE THE PLACE WHERE THEY LAID HIM..

-MARK:16:6

மகதலேனா என்பது ஒரு ஊரை குறிப்பதாகும். இது மிக்தல் என்ற வார்த்தையில் இருந்து வந்தவையாகும். மிக்தல் என்பது தூண் என்று பொருள். எனவே மகதலேனா என்ற ஊரில் பிறந்து வளர்ந்ததால் இந்த மரியாளுக்கு மகதலேனா மரியாள் என்று பெயர்.மரியாள் என்பதற்கு அன்புள்ள பெண், துணிவுள்ள பெண் என்பதாகும் ஆண்டவர் இயேசுவின் பணியில் மிக அதிகமாக பங்கு வகித்தவர் இந்த மகதலேனா மரியாள் என்பதை நாம் அதிகமாக அறிந்து கொள்ள முடியும். குறிப்பாக இயேசுவின் மரணம்,உயிர்த்தெழுதலில் இவர் அதிகமாக பங்கெடுத்தவர் என்பதை புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்.

## 1. ஆண்டவர் இயேசுவின் மீது அன்பும் அக்கறையும் கொண்ட மகதலேனா மரியாள்

## THE LOVE AND CARE OF MARY MAGDALENE ON JESUS CHRIST

-MARK:16:1-3/மாற்கு:16:1-3

யூதர்களின் மரபுப்படி (அ) பாரம்பரியத்தின் படி இறந்தவர்களின் உடல் அடக்கத்திற்கு பிறகு மூன்று நாட்கள் உறவினர்கள் கல்லறைக்கு செல்வது வழக்கமாக இருந்தது. இந்த நிலையில் இயேசுவுக்கு பணிசெய்த அவருடைய அன்புக்கு பாத்திரமாக விளங்கிய பெண்கள் அவருக்கு வெறும் அஞ்சலி செலுத்துவதற்கு மட்டுமல்ல அவரது உடலில் தைலம் (அ) நறுமணம் பூசுவதற்காக கல்லறைக்கு விரைந்தனர். கல்லறையில் வைக்கப்பட்டிருந்த கல்லை அவர்கள் ஏற்கனவே இயேசுவின் அடக்கத்தின் போது பார்த்து இருந்தார்கள். இருப்பினும் இயேசுவை மீண்டும் பார்த்து அவருடைய உடலுக்கு நறுமணம் தைலம் பூசி அவருடைய உடலை திரு நிலைப்படுத்த அவர்களின் ஆழ்ந்த அன்பு அவர்களைத் தூண்டியது. இயேசு கிறிஸ்து இறந்த பிறகு அவருக்கு தைலம் (அ) நறுமணம் பூசாத ஒரு குறையை நிறைவு செய்வதாகத்தான் இந்தப் பெண்களின் ஆர்வமும் அக்கறையும் காணப்பட்டது. இந்த கல்லறைக்கு பெண்களில் முதலிடம் சென்றவர் மகதலேனா மரியாள் ஆவார். இயேசுவின் மீது அதிக அன்பும் அக்கறையும் கொண்டவர் இந்த மகதலேனா மரியாள் என்பதை புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்.

## 2. ஆண்டவருக்காக அச்சமின்றி துணிவுடன் செயல்படும் மகதலேனா மரியாள்.

## THE FEARLESS AND BOLD ACTION OF MARY MAGDALENE FOR JESUS CHRIST

-MARK:16:4-5/மாற்கு:16:4-5

ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்பட்டவுடன் அவருக்கு அன்பாய் இருந்த சீடர்கள் யூதர்களுக்கு பயந்து பூட்டப்பட்ட அறையில் பதுங்கி ஓடி ஒளிந்து கொண்டார்கள். இந்த நிலையில் அச்சமின்றி துணிவுடன் கல்லறைக்கு சென்றவர் இந்த மகதலேனா மரியாள் ஆகும். இவரிடத்தில் இயேசுவின் மீது காணப்பட்ட அன்பின் நிமித்தமாக அவருக்குள் இருந்த அச்சம் நீங்கி துணிவுடன் செயல்பட்டார். அதிகாலையில் கல்லறைக்குச் சென்றார் கள்ளர்கள் குறித்து இருளை குறித்தும் அச்சமில்லாமல் நறுமணங்களை எடுத்துக்கொண்டு

கல்லறைக்குச் சென்றார். கல்லறையை காணும்போது மூடியிருந்த பெரிய கல் அகற்றப்பட்டு இருந்தது. இது மகதலேனா மரியாளுக்கு ஒரு மகிழ்ச்சி கலந்த அதிர்ச்சியாக இருந்தது. கல் அகற்றப் பட்டிருந்த அதிர்ச்சியுடன் இன்னொரு அதிர்ச்சியும் இவர் கண்டார் அது அங்கு சென்றிருந்த ஒரு வாலிபன். யார் இந்த வாலிபன்? இந்தக் கல்லை அகற்ற இவருக்கு எங்கிருந்து வல்லமை கிடைத்தது? அவர் ஏன் இங்கே இருக்கின்றார்? இதுபோன்ற கேள்விகளுடன், அதிர்ச்சியுடன், பயத்துடன் இருக்கின்றார் அப்பொழுது வெண்ணாடை அணிந்த தேவதூதர் மகதலேனா மரியாளுக்கு இருக்கும் அதிர்ச்சியையும் பயத்தையும் நீக்குகின்றார். அந்த தேவதூதன் கொடுக்கும் பதில் அச்சமின்றி கல்லறைக்கு உள்ளே நுழைய இவர்களுக்கு காரணமாகவும், துணிவுமாகும்.

### 3. ஆண்டவருடைய திருப்பணி செய்த முதல் பெண் மகதலேனா மரியாள்

### THE FIRST WOMEN TO DO THE SERVICE OF JESUS CHRIST

-MARK:16:6-8/மாற்கு:16:6-8

மகதலேனா மரியாள் சந்தித்த தேவதூதன் தந்த செய்தி ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிருடன் எழுப்பப்பட்டார் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியாகும். **"எழுப்பப்பட்டார்"** என்பது கடவுளின் வல்லமை இயேசுவின் செயல்பட்டதால் அவர் இறப்பிலிருந்து விடுபட்டு மீண்டும் ஒரு புதிய வாழ்வு பெற்றுவிட்டார் என்பதை காண்பிக்கின்றது. இதற்கு தேவதூதர் காண்பிக்கும் அடையாளம் **"காலியாகி விட்ட கல்லறை, அவர் இங்கே இல்லை இதோ அவரை வைத்திருந்த இடம் என்பதாகும்"** இந்த வெற்றியின் செய்தியை பயந்துபோய் காணப்பட்ட சீடர்களுக்கு அறிவிப்பதில் முதல் திருப்பணி பெண்ணாக செயல்பட்டவர் மகதலேனா மரியாள் ஆவார். இதை சீடர்களுக்கு அறிவிக்கவேண்டும் குறிப்பாக பேதுருவுக்கு அறிவிக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறையுடன் செயல்பட்டவர் மகதலேனா மரியாள் என்பதை அவருடைய திருப்பணியின் மூலம் புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்.

நிறைவாக........

ஆண்டவர் இயேசுவின் மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் மகதலேனா மரியாளின் திருப்பணி மிக முக்கியமாக காணமுடிகிறது. அத்துடன் ஆண்டவரின் உயிர்த்தெழுதலின் செய்தியை அறிவித்தவர் இந்த மகதலேனா மரியாளின் திருப்பணி நற்செய்தி பணியாக நமக்கு அடையாளப்படுத்தப்படுகிறது. இன்றைக்கு உயிர்த்தெழுந்து இயேசுவின் திருப்பணி செய்ய நாம் அனைவரும் அழைக்கப்படுகிறோம்...

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

உயிர்த்தெழுந்த ஆண்டவரின் திருப்பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs.E.Nancy Baskar.*






*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே!*

*கிறிஸ்தவர்களாகிய நாம் நமக்கு பிரச்சனைகள் கஷ்டங்கள் வியாதிகள் என்று வரும்போது மட்டும் அதிகமாக ஜெபித்து உபவாசித்து இரவும் பகலும் மன்றாடி அதிக பக்தியாய் செயல்படுகிறோம். ஆனால் தினசரி வாழ்க்கையில் போதிய அளவு ஜெபமோ உபவாசமோ வேத வாசிப்போ இராது. இது ஒரு தவறான பழக்கம் ஆகும். சிலுவை பாடுகளை சந்திக்க செல்லும் முன்பு இயேசு கெத்சமனே தோட்டத்துக்கு வந்து ஜெபித்தது அவருடைய பாடுகளின் அழுத்தத்தால் ஏற்பட்ட புதிய பழக்கம் அல்ல. அவர் வழக்கமாக கெத்சமனே வந்து இருதயத்தை ஊற்றி ஜெபிப்பது போல அன்றும் ஜெபிக்க வந்தார்.*

*கடவுளை தேடுவதும், ஊக்கமாக ஜெபிப்பதும் பிரச்சனைகளால் கட்டாயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பவாத அனுபவங்களாக இருக்கக்கூடாது. நம்முடைய சராசரி வாழ்க்கையில் கடவுளை நோக்கி ஜெபிக்கவும், கடவுளின் ஐக்கியத்தை உணரவும், நம்முடைய உணர்வுகளை பகிர்ந்து கொள்ளவும் நமக்கு ஒரு கெத்சமனே தோட்ட அனுபவம் இருக்க வேண்டும். தினமும் கடவுளின் கிருபையும், வழி நடத்துதலும், கடவுளின் ஐக்கியமும் நமக்கு தேவை. எனவே தினமும் நமக்கு தொடர்ந்து ஜெப வாழ்க்கை தேவை. ஜெபிக்க நேரமே இல்லை என்பது நமக்கு சரியான கிறிஸ்தவ அனுபவம் இல்லை என்பதற்கு சான்றாகும்.*

*"ஜெபம் மனிதனை கடவுளுக்கு முன்பாக விழவைத்து பிற மனிதர்களுக்கு முன்பாக நிமிர்ந்து நிற்கச் செய்கிறது".*

*ARTICLE BY*

**JAYAKUMARI MANOHARAN**

WOMEN'S Fellowship



# மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல்

**"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்". (மத்தேயு *18:3*)**

*மனம் திரும்புதலுக்கும், பிள்ளைகளுக்கும் என்ன சம்பந்தம்? இந்த இடத்தில் பிள்ளைகள் என்று சொல்லப்படுவது தாய் தகப்பனை முற்றிலும் சார்ந்து கொள்ளுகிற மன நிலையைக் குறிக்கிறதாயிருக்கிறது. நம் வாழ்க்கையில் நாம் தேவனை முற்றிலும் சார்ந்து கொள்ளக்கூடிய ஒரு மனநிலைக்குள் வரும் பொழுது, நாம் மனம்திரும்ப வேண்டிய பல காரியங்களை உள்ளடக்கியதாகவே இருக்கிறது. இயற்கையாக மனிதன் வாழ்க்கையில் தன்னைத்தானே சார்ந்து, நம்பி, தன்னுடைய புத்தியையும், தன்னுடைய அறிவையும், தன் செல்வாக்கையும் நம்பி வாழுகிற பாவத்தன்மை உள்ளவன். ஆதாம்-ஏவாளின் வீழ்ச்சியில் இது ஒரு பங்களிப்பு.*

*ஆனால் நம்முடைய வாழ்க்கையில் பிள்ளைகளைப் போல ஆக வேண்டுமானால், நம் வாழ்க்கையில் மனம்திரும்ப வேண்டிய காரியங்கள் உண்டு. அதாவது நம்மை நாமே சார்ந்து கொள்வதை விட்டு, கர்த்தரை மாத்திரமே முற்றிலும் சார்ந்து கொள்கிற மனநிலைக்கு நாம் உட்பட வேண்டும்.*

**"இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்" (மத்தேயு *18:4*)**




என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். பொதுவாக தாழ்மைப்படுத்தல் அனேகர் விரும்பாத ஒன்று. ஆனால் தாழ்மை படுதலே மிகப்பெரிய கனத்தை நமக்கு கொடுக்கும் என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

பெருமை நம்மை அழித்துவிடும், தாழ்மை நம்மை உயர்த்தும் என்ற ரகசியத்தை அநேகருடைய வாழ்க்கையில் விளங்கிக்கொள்வதில்லை. பெருமை எப்பொழுதுமே நம்மை மனிதனிடத்திலிருந்தும், மற்ற உறவுகளிலிருந்தும், தேவனிடத்திலிருந்தும் பிரித்துவிடும். தாழ்மை தேவனோடும், மக்களோடும் நல்லுறவை ஏற்படுத்தும். எல்லாவற்றிற்கும் மேலாக தாழ்மை ஒரு மனிதனை தேவனுடைய ராஜ்யத்தில் பெரியவனாக, உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லுகிறது. ஆகவே நாம் சிறு பிள்ளைகளைப் போல கர்த்தரை மாத்திரமே சார்ந்துக்கொள்வோம். அப்போது நிச்சயமாக வாழ்க்கையில் உயர்வான நிலையை கர்த்தர் நமக்குக் கொடுத்து நம்மை ஆசீர்வதிப்பார்.

YOUTH FELLOWSHIP



# அன்பின் அளவு

*பல ஆண்டுகளுக்கு முன்... ஒரு நாள் அயர்லாந்து நாட்டை சார்ந்த THE EXPRESS OF IRELAND என்ற கப்பல் கடலில் மூழ்கியது. அந்த கப்பலில் பயணம் செய்த சிப்பந்திகளும், பயணிகளுமாகிய அநேகர் மூள்கிய கப்பலில் இறந்து போனார்கள். இறந்து போனவர்களில் 129 பேர் இரட்சன்ய படை (SALVATION ARMY) என்ற சங்கத்தை சேர்ந்தவர்கள். இறந்த 129 பேரின் உடலும் கடலுக்கடியிலும், சிதைந்த கப்பலிலுலுமிருந்து கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் ஒன்றாகிலும் உயிர்பாதுகாப்பிற்க்காக அணியப்படும் LIFE BELT காணப்படவில்லை. அது அனேகருக்கு ஆட்சர்யத்தை தந்தது. அதன்பிறகு இந்த விபத்தில் பிழைத்து கரை சேர்ந்த சிலர் இந்த 129 பேரை பற்றியும் சொல்லியவை தேவனுடைய நாமத்துக்கு மகிமையை கொடுப்பனவாக இருந்தன.*


*கப்பல் மூழ்கப் போகிறது என்பதை அறிந்தவுடன் இந்த தேவப்பிள்ளைகள் கொஞ்சம்கூட பதறாமல் அலைமோதாமல் அமைதியாக இருந்தனராம். அந்தக்கப்பலில் இருந்த அனைவருக்கும் கொடுக்கக்கூடிய அளவில் கப்பல் அதிகாரிகளிடம் உயிர்பாதுகாப்பு சாதனங்கள் இருக்கவில்லை. எனவே இரட்சனியப் படை வீரர் அனைவரும், தங்களுக்கென உயிர்காப்பு சாதனங்களை வைத்துக்கொள்ளாமல் மற்றவர்களுக்கு கொடுத்து விட்டனராம்.*

*மேலும் அவர்கள் "எங்கள் வாள்க்கையில் நாங்கள் இரட்சகரின் அன்பை ருசித்திருக்கிறோம். இயேசுவை நாங்கள் அறிந்து. அவருடைய பாவமன்னிப்பை பெற்று, அவரை எந்த நேரத்திலும் விசுவாசிப்பதால் நாங்கள் சாவுக்கு அஞ்சவில்லை தேவனை சந்திக்க நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம்." என்று சொல்லி கப்பல் முழுகும் சமயம் ஜெபத்துடன் அவர்கள் கப்பலின் மேல் தளத்தில் நின்றார்களாம்.*

*"கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்.(பிலிப் 1:21)*


**ஆண்கள் ஐக்கிய சங்கம்**

MEN'S FELLOWSHIP


Jehoash
Jania
Kevin
Janet
Reagan
Teacher : Mrs. Anitha Suresh
Death Could Not Hold Him
Rejoice in the resurrection
of JESUS CHRIST
Wishing You a
Blessed & Joy Filled
EASTER

# BEGINNER ARTICLE



# APRIL BIBLE READING

| | | | |
|---|---|---|---|
| 1 | FRI | Job 29:1-17 | Mark 12:1-17 |
| 2 | SAT | Job 29:18-30:10 | Mark 12:18-34 |
| 3 | SUN | Cross And A New Paradigm to Discipleship | Gen. 26:12-33<br>Psalm 92<br>2Cor. 11:21-31<br>Mark 10:46-52 |
| 4 | MON | Job 30:11-31 | Mark 12:35-44 |
| 5 | TUE | Job 31:1-23 | Mark 13:1-13 |
| 6 | WED | Job 31:24-32:14 | Mark 13:14-23 |
| 7 | THU | Job 32:15-33:18 | Mark 13:32-14:11 |
| 8 | FRI | Job 33:19-34:12 | Mark 14:12-21 |
| 9 | SAT | Job 34:13-37 | Mark 14:22-31 |
| 10 | SUN | Palm Sunday Hosanna: Lord Save Us | Psalm 118:19-29<br>1Tim. 4:6-16<br>Luke 19:29-40<br>Zech. 9:1-12 |
| 11 | MON | Job 35:1-36:15 | Mark 14:32-50 |
| 12 | TUE | Job 36:16-33 | Mark 14:51-65 |
| 13 | WED | Job 37:1-24 | Mark 14:66-15:5 |
| 14 | THU | Eucharist: Communion of Suffering Humanity | Ex. 12:1-7<br>Psalm 116<br>1Cor. 11:23-34<br>Mark 14:17-25 |
| 15 | FRI | Good Friday: Cross: Accomplishment of Salvation | Ex. 14:15-22<br>Psalm 22<br>Heb. 13:8-17<br>John 19:23-30 |
| 16 | SAT | Job 39:13-40:14 | Mark 15:33-47 |
| 17 | SUN | Resurrection: Celebrating Boundless Transformation | 2Sam 22:1-20<br>Psalm 16<br>1Cor. 15:20-28<br>Mark 16:1-11 |
| 18 | MON | Job 40:15-41:11 | Mark 16:1-19 |
| 19 | TUE | Job 41:12-34 | 1 Cor. 15:1-19 |
| 20 | WED | Job 42:1-17 | 1Cor 15:20-34 |
| 21 | THU | Josh 1:1-18 | 1Cor. 15:35-49 |
| 22 | FRI | Josh 2:1-21 | 1Cor. 15:50-58 |
| 23 | SAT | Josh 3:1-17 | Gal 1:6-24 |
| 24 | SUN | Empowered by the Risen Lord | Gen. 28.10-22<br>Psalm 29<br>John 20:11-18<br>Acts 20:7-12 |
| 25 | MON | Josh 4:1-24 | Gal 2:1-21 |
| 26 | TUE | Josh 5:1-6:5 | Gal. 3:1-18 |
| 27 | WED | Josh 6:6-21 | Gal. 3:19-29 |
| 28 | THU | Josh 6:22-7:5 | Gal 4:1-20 |
| 29 | FRI | Josh 7:6-26 | Gal 4:21-5:12 |
| 30 | SAT | Josh 8:1-29 | Gal 5:13-6:10 |

# MARCH

## Congratulations

### KIDS COLOURING

Jesil Barnice
Jania Preni
Johan Sanjo
Hazel Hartlyn
Reagan Shanç
Kariss Angelo
Chris Gabriel

### CODE WORD

Jania Preni
Hazel Hartlyn
Johan Sanjo
Kariss Angelo
Sherin Shah
Jason Eric

### BIBLE QUIZ

Roshan
Joshuva

### CROSSWORD

Johan Sanjo
Roshan
Sherin Shah
Eric Aaron
Joshuva

### WORD SEARCH

Johan Sanjo
Roshan
Sherin Shah
Eric Aaron
Jason Eric

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**To Church Email:** csitcalain@gmail.com



# Titus, Philemon, Hebrews

## தீத்து, பிலேமோன், எபிரேயர்

APRIL'22 - QUESTIONS




1. யாரை விட்டு விலக வேண்டும்?
2. பவுல் நான் பெற்ற மகன் என்று யாரை குறிப்பிடுகிறார்?
3. யார் தேவனுடைய வீட்டில் உண்மையாய் இருந்தது?
4. யார் இளைப்பாறுதலுக்குட்படுத்தியது?
5. யார் தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்?
6. நியாயப்பிரமாணம் பெலவீனமுள்ள மனுஷர் களை ------------------------ ஏற்படுத்துகிறது.
7. கர்த்தர் எந்த, எந்த குடும்பத்தினரோடு உடன்படிக்கை ஏற்படுத்தும் காலம் வருகிறது என்றார்?
8. ------------------------- மன்னிப்பு உண்டாகாது?
9. பவுல் எதை விட்டு விடாதிருங்கள் என்றார்?
10. எரிகோ பட்டணத்தின் மதில்கள் எத்தனை நாள் சுற்றி வரப்பட்டு விழுந்தது?

### மார்ச்-2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. 1 தீமோ:1:4 | 2. 1தீமோ:1:20 | 3. 1தீமோ:2:8 | 4. 1தீமோ:3:6 | 5. 1தீமோ:4:12
6. 1தீமோ:5:6 | 7. 1தீமோ:6:20 | 8. 2தீமோ:2:15 | 9. 2தீமோ:3:11 | 10. 2தீமோ:4:12

திருமதி.ஜோனீஷ் ஹெர்ஹெல், திருமதி. ஜெயந்தா ஜான், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், செல்வி.அஜூன்ஷா, செல்வி.ஷெறின்ஷா, திருமதி.ஹெலன் கம்பீரம், திருமதி.ஜமுனா ராணி, திருமதி.பமீலா டேனியல்

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.
மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

YOUR NAME / BIBLE QUIZ / JAN'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348

# KORIJHOLLA CHURCH PROJECT

## கொரிஜ்ஹோலா ஆலையத் திட்டம்






நமது திருச்சபையின் ஆண்கள் சங்கம் சார்பில் ஒடிஷா மானிலத்தில் கொரிஜ்ஹோலா பகுதியில் தேவாலயம் கட்டப்பட்டுவருகிறதை யாவரும் அறிவோம். கர்த்தருக்கு சித்தமானால் ஏப்ரல் மாதம் பிரதிஷ்டை நடைபெறும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரையில் நாம் கொடுக்க வேண்டிய 4,00,000/- தொகையை முழுவதுமாக கொடுத்து முடித்துள்ளோம், கர்த்தருக்கே ஸ்தோத்திரம். இதில் தங்களை இணைத்துக்கொண்ட ஆண்கள் சங்க அங்கத்தினர்கள் யாவருக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். கொடுத்த ஒவ்வொரு கரங்களையும் தேவன் பலப்படுத்தி, உயர்த்துவார், ஆசிர்வதிப்பார். இதற்க்காக ஆரம்ப நாட்களில் முயற்சிகளை எடுத்த திரு. கிறிஸ்றோபர் மற்றும் திரு. சுரேஷ் ராஜன் ஆகியோக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நமது திருச்சபையின் மூலம் தேவன் மென்மேலும் பெரிய காரியம் செய்வார் என முழுநிச்சயமாய் கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்...

**இணைந்து கட்டுவோம் வாருங்கள்**




# How it Works




**STEP 1** DONATE IN THIS BOX

**STEP 2** COLLECT & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



**THE CBS MINISTRY KIDS TOGETHER THEY ARE SUPPORTING, EDUCATING AND CHANGING ONE KID'S LIFE (Ms. Rithika/Chennai).**

**COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO SAVE MONEY AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION & FOR HER BAISC NEEDS.**

# KIDS COLOURING



## He is Risen

Name:

# On the Road to Easter Word Search

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | F | D | J | Z | A | S | H | W | E | D | N | E | S | D | A | Y | H | R | R |
| N | O | A | G | O | O | D | F | R | I | D | A | Y | J | E | S | B | O | E | E |
| G | O | L | P | A | S | S | O | V | E | R | P | A | S | F | O | R | L | S | S |
| T | T | M | Y | B | M | F | J | E | S | U | A | J | A | C | K | A | Y | U | U |
| N | W | S | P | S | G | O | L | O | V | E | L | E | C | E | D | N | T | R | R |
| N | A | G | R | F | A | R | L | P | A | L | M | B | R | A | N | C | H | E | R |
| J | S | I | A | A | F | T | P | L | Y | E | S | E | I | S | O | J | U | S | E |
| C | H | V | Y | S | O | Y | U | J | Y | N | U | A | F | T | A | E | R | U | C |
| J | I | I | E | T | R | D | R | R | M | T | N | S | I | E | H | S | S | S | T |
| A | N | N | R | I | H | A | P | W | D | J | D | T | C | R | X | U | D | W | I |
| N | G | G | C | N | O | Y | L | W | E | A | A | E | E | Y | G | S | A | Z | O |
| W | E | D | N | G | L | S | E | H | O | L | Y | W | E | E | K | H | Y | C | N |

Ash Wednesday
Sacrifice
Almsgiving
Prayer
Fasting
Lent

Holy Week
Holy Thursday
Good Friday
Holy Saturday
Easter
Palm Sunday
Purple

Palm Branch
Forty Days
Jesus
Passover
Foot Washing
Resurrection
Love



JUNIOR


Name: ______________________________ Date: ________

# Holy Week

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| X | T | U | O | R | P | J | B | B | C | R | U | C | I | F | I | X | I | O | N | L | A | D | M |
| O | L | U | A | D | T | Q | G | I | E | L | T | I | P | C | G | I | P | S | R | E | E | E | T |
| G | R | B | J | L | H | G | N | O | I | T | C | E | R | R | U | S | E | R | Q | B | C | T | H |
| C | H | F | U | G | D | J | U | E | C | A | K | K | J | C | Z | H | G | T | G | B | M | H | R |
| W | B | A | A | F | X | F | A | L | Y | R | C | R | A | T | C | N | O | Y | O | X | E | U | L |
| F | R | J | E | G | L | H | W | V | B | F | Z | Z | O | G | H | J | O | T | P | Z | I | N | P |
| S | W | Z | U | H | V | C | T | R | L | H | B | P | J | O | K | F | D | U | M | L | O | U | A |
| I | G | K | T | B | V | C | N | U | A | V | R | Y | E | Q | K | B | F | E | X | G | M | K | S |
| F | B | W | O | M | V | Z | T | I | S | M | M | W | S | Y | B | Z | R | Y | G | S | K | D | S |
| A | S | G | T | O | Z | C | E | X | T | C | F | M | U | C | Q | L | I | E | O | Y | K | M | O |
| S | R | A | V | T | W | G | F | Z | S | V | O | L | S | G | B | T | D | F | W | Q | Y | A | V |
| T | I | E | J | Y | Q | Q | C | V | U | O | X | K | C | N | E | S | A | X | Q | B | I | U | E |
| I | Q | Y | U | T | D | W | U | C | P | I | U | Z | H | I | T | S | Y | C | D | F | V | N | R |
| N | S | K | D | P | M | S | R | A | P | O | S | B | R | N | R | V | N | P | X | G | B | D | P |
| G | I | X | A | M | W | T | G | C | E | G | Y | R | I | R | A | X | N | J | N | N | Y | Y | T |
| F | O | J | S | E | J | R | L | C | R | S | T | E | S | O | Y | Y | E | J | F | Q | V | T | O |
| G | L | T | V | Q | L | D | S | T | M | P | B | D | T | M | A | U | E | N | U | L | Y | H | O |
| C | U | D | D | K | E | E | W | Y | L | O | H | E | E | R | L | O | X | E | O | B | O | U | O |
| R | E | Y | A | R | P | V | D | N | K | Z | B | M | Y | E | P | K | B | W | P | Q | J | R | X |
| O | G | U | U | I | U | L | B | W | F | V | V | P | M | T | S | Z | W | D | K | Y | K | S | K |
| A | L | O | M | C | F | C | U | Q | K | I | Q | T | U | S | E | G | L | F | H | T | Q | D | W |
| S | E | J | H | E | I | R | Q | O | R | S | I | I | P | A | Z | E | V | P | A | H | T | A | O |
| X | N | G | I | A | M | G | K | B | R | S | X | O | L | E | B | G | V | H | O | M | P | Y | S |
| X | T | S | E | L | P | I | C | S | I | D | Q | N | Y | W | L | W | D | A | V | I | Q | K | I |

betrayal
crucifixion
disciples
Easter Morning
empty tomb
Fasting
Good Friday
Holy Week
Jesus Christ
Judas
Last Supper
Lent
Maundy Thursday
Passover
Prayer
Redemption
resurrection

SENIOR
*& above*



**Across**
1 Goes with error (5)
2 Caesar + Pontius pilate (6)
4 Had a little lamb (4)
5 Name of play (7)
7 From Amsterdam? (6)
10 Has a shell (3)
12 Supplied money to (4)
13 Cross? (8)
15 Anno (L) (4)
16 Chocolate one (5)
17 Signed with (I o) I? (4)
18 Do for lent (4)
19 King (L) (3)
20 Light a candle with (5)
23 Of a kind? (3)
24 Focus of Easter (5)
26 Son of (Gaelic) (3)

**Down**
1 Grave (4)
2 Pull out of a hat? (6)
3 Firm, as in faith (6)
5 Emblem of victory (4)
6 Day of rest (6)
7 Made a crown from (6)
8 Of the valley? (4)
9 Procession (6)
10 Holidays (6)
11 Meal for passover (4)
14 The reconciliation (theo) (9)
18 Goes with chips (4)
21 Easter symbol (5)
22 Service (4)
24 His Initials (2)
25 Risen (2)

# Happy Birthday

# April

| | |
|---|---|
| 01-Apr | Mrs. Olivia Sherin W/o Mr. Jeremiah Kingston |
| 02-Apr | Mr. Blessin Paul S/o Mr. Justin Oliver |
| 02-Apr | Baby. Aaliya B. Babina D/o Mr. Babu Abraham |
| 03-Apr | Mr. Alvin Kumar Asirmanns |
| 03-Apr | Mstr. Alan Manis S/o Mr. Alvin Kumar |
| 04-Apr | Mstr. Regan Shah S/o Mr. Balaji Ramaiyan |
| 06-Apr | Mr. Herchil Harish |
| 09-Apr | Mr. A Yobu |
| 09-Apr | Mrs. Princy Ashok W/o Mr. Ashok Daniel |
| 09-Apr | Dr. Pradeev Raj |
| 10-Apr | Mr. Ghilton Raj |
| 13-Apr | Mrs. Prema Ruth. T W/o Mr. Premkumar |
| 17-Apr | Mrs. Shelly Kurian W/o Dr. Shino Mathew |
| 17-Apr | Ms. Diniya Sunshine D/o Mr. D. Rajavel |
| 21- Apr | Mr. Babu Abraham |
| 28-Apr | Mr. M. Santhosh Joel Kumar |
| 29- Apr | Mr. Daniel Durai Singh |
| 30-Apr | Ms. S.M Sherin Shah D/o Mr. Silvester Solomon |
| 30-Apr | Mr. Mohana Kumar R |

# Happy Anniversary

| | |
|---|---|
| 05- Apr | Mr. Kingsly Stubert & Mrs. Shalini Vimala |
| 10- Apr | Mr. Baskar Rajaram & Mrs. Angelin Nalini |
| 13- Apr | Mr. Sunith Samuel & Mrs. Shiby Angel |
| 19- Apr | Mr. Nelson Sopitha Raj & Mrs. Biblin |
| 26- Apr | Mr. Melbin Paul & Mrs. Shally |

# CONFIRMATION SERVICE





















**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**